**தலைப்பு – 183 மக்கள் தொடர்பு மற்றும் மக்கள் அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மக்கள் தொடர்பு மற்றும் மக்கள் அலுவல்கள் அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 29 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும்

நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 376.7 மில்லியன் மொத்த தேறிய ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 335.4 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், சேமிப்புக்கள் ரூபா 41.3 மில்லியன் அதாவது தேறிய ஏற்பாட்டில் 10.9 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 78.7 | 72.0 | 6.7 | 8.51 |
| மூலதனம் | 298.0 | 263.4 | 34.6 | 11. 61 |
| மொத்தம் | 376.7 | 335.4 | 41.3 | 10.96 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 18301 | 3.0 | 2.4 | 0.3 | 1.3 | 7.0 | 3.9 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் 6000/0000/00/0015/0195/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் ரூபா 11.5 மில்லியன் மீதி காணப்பட்டது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், சேவைகள் மக்கள் தொடர்பு மற்றும் மக்கள் அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 183 – மக்கள் தொடர்பு மற்றும் மக்கள் அலுவல்கள் அமைச்சு

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 350,000 தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 12 செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் தேறிய நிதியேற்பாட்டில் 30 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையான வீச்சிலான அளவினைக் கொண்டிருந்தது.

### 3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.2.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கையின் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்து முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இருப்பு பதிவேட்டின் மீதிகளுக்கும் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் உள்ளபடியான பெறுமதிகளுக்குமிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**3.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டு காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப் பிரமாணம் 104 | 782,111 | 2014 ஏப்ரல் 21 ஆந் திகதி வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 1642 | | 2014 ஏப்ரல் 21 ஆந் திகதி வாகனத்திற்கு ஏற்பட்ட திடீர் விபத்து தொடர்பாக பொலிசுக்கு அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 1646 | | 12 வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>--------------------------------------------- | | |
| 1989 திசெம்பர் 27 ஆந் திகதிய 62/89 ஆந் திகதிய ஆம் இலக்க சுற்றறிக்கை | 419,055 | நாளாந்தம் பத்திரிகைகளில் ஒரு பிரதி வீதம் (மும்மொழிகளிலும் குறைந்தது இரண்டில்) கொள்வனவு செய்யப்படக் கூடிய போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது ஒரு நாளைக்கு நாளாந்தம் 13 வகையான பத்திரிகைகள் வீதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (இ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை<br>--------------------------------------------- | | |
| 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க சுற்றறிக்கை | 880,000 | 2014 மே 5 ஆந் திகதி முதல் மே 15 வரை அமைச்சர் மற்றும் பிரத்தியேக செயலாளர் ஆகியோர் வெளிநாடு செல்வதற்காக விமான பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கும் விமான பயணங்களை ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகளும் தனியார் கம்பனியொன்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஈ) அமைச்சரவைப் பத்திரம்<br>----------------------------------------- | | |
| 2004 மே 12 ஆந் திகதிய 04/0427/020/002 ஆம் இலக்க அமைச்சரவைப் தீர்மானம் | 863,590 | அனைத்து பிரச்சார விளம்பரங்களும் அரச ஊடகங்களினூடாக நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும், 04 தனியார் கம்பனிகள் மூலம் அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

அமைச்சின் அமைய பதவியணியினருக்கு 2014 ஆம் ஆண்டின் போது சம்பளக் கொடுப்பனவு ஒவ்வொரு நாளும் அப்பதவியணியினர் வருகை தந்ததாக கருதி சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த உத்தியோகத்தர்களுக்காக வருகை பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன், சம்பளக் கொடுப்பனவின் போது சில உத்தியோகத்தர்களுக்குரிய சம்பளம் உரிய உத்தியோகத்தரால் பெற்றுக்கொள்ளப்படாமல் ஏனைய உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 3.6 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை கீழே காட்டப்பட்டுள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 03 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 40 | 23 | 17 |
| (iii) | இரண்டாம் நிலை | 08 | 06 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 12 | 11 | 01 |
| | மொத்தம் | 66 | 43 | 23 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 23 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.